

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2025) சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில், சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் சர் ஜான் மார்ஷல் அவர்களுக்கு சென்னை, எழும்பூர், அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள திருவுருவச் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வின்போது, நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் (மு.கூ.பொ.) த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தொல்லியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் கிரெக் ஜாமிசன், கா. ராஜன், திருமதி. நயன்ஜோத் லஹிரி, ஆர்.பாலகிருஷ்ணன், டோனி ஜோசப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நேற்று (5.1.2025) உள்ள பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் ரூ.215 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய சிறப்பு மற்றும் உயர் சிறப்பு சிகிச்சைக்கான புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பிகே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , மருத்துவக் கல்வி இயக்கக சிறப்பு அலுவலர் டாக்டர் எம்.ரமேஷ், மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் கே.ஹேமலதா , மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார். மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் முத்தமிழ் அரசு, செயற்பொறியாளர் கோவிந்தராஜலு, பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.முரளி, சந்துரு. மகேஷ்குமார். மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.ஸ்ரீதணி, திருமதி.அமுதா மற்றும் மாநகராட்சி மற்றும் மருத்துவ அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை! டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்க உரை!

# மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பா.சுகுமாறன் படத்திறப்பு!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்!

திருவள்ளூர், ஜன.6

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பா.சுகுமாறன் உடல் நலக்குறைவின் காரணமாக 24.12.2024 அன்று மறைவு எய்தினார்.

அன்னாரின் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (07.01.2025 செவ்வாய்) மாலை 4.00 மணி அளவில் பொன்னேரி திருவேங்கடபுரம் அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்கவுரையோடு திருவுருவப் படத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்து இரங்கல் உரையாற்றுகிறார்.

நிகழ்வில் இ.ஏ.பி. சிவாஜி, மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.விஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, டாக்டர். பரிமளம் விஸ்வநாதன், பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி. ராமமூர்த்தி, மீஞ்சூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.கருணாகரன், ஜி.ரவி, மு.ராஜேந்திரன், ந.மீனா அன்பு, ஆர்.ரவிச்சந்திரன், ச.ஆறுமுகம், சி.எம்.ரமேஷ், எம்.ராஜா முன்னிலை வகிக்கின்றனர்.

திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் க.அமுதரசன், கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூயன், ஏ.கே.சுரேஷ், செந்தமிழ்ச்சி இரங்கல் உரையாற்றுகிறார்கள்.

ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், எம்.எஸ்.கே.ரமேஷ்.ராஜ், கா.சு.ஜெகதீசன், நா.செல்வசேகரன், ஜி.ரவிக்குமார், பி.முத்து, க.சு.தமிழ் உதயன், மு.மணிபாலன், கே.வி.ஆனந்த்குமார், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ஜான் (எ) பொன்னுசாமி, ந.பரிமளம், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், வெ.நரசிங்கமூர்த்தி, இ.நிலவழகன், மீ.வீ.கோதண்டம், நா.மோகன்ராஜ், அத்திப்பட்டு ஜி.ரவி, மு.ராசாத்தி செல்வசேகரன், ருக்மணி மோகன்ராஜ், தமிழ்செல்வி பூமிநாதன், ப.அலெக்சாண்டர் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொன்னேரி தொகுதி நிர்வாகிகள் ஒருங்கிணைந்த மீஞ்சூர் ஒன்றிய கழகத்தின் கழக முன்னோடிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின், முன்னாள், இந்நாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக அணிகளின் மாவட்ட ஒன்றிய கழகத்தின், இந்நாள், முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், பிரதிநிதிகள், இயக்குனர்கள், உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

# ஆவடி தொகுதி - திருவேற்காட்டில் ரூ.3.57 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர், ஜன. 06

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் 15-வது நிதிக்குழு மானிய நிதி மற்றும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.3.57 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

இதில் 18வது வார்டு, நூம்பல் பகுதியில், ரூ.1 கோடியே 80 லட்சம் மதிப்பில் 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி மற்றும் குடிநீர் இணைப்பு குழாய் அமைக்கும் பணி,

6-வது வார்டு, அயணம்பக்கம் மற்றும் மேலயனம்பாக்கம் பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பட்டு நிதியின் மூலம் ரூ.60 லட்சம் மதிப்பில் புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணி மற்றும் ரூ.13.50 லட்சம் மதிப்பில் புதிய நியாய விலை கடை அமைக்கும் பணி,

9வது வார்டு ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பட்டு நிதியின் ரூ.10 லட்சம் மதிப்பில் பிடிசி நகர் பேருந்து நிறுத்தம் கட்டும் பணி மற்றும் எம்ஜிஆர் நகர் பிரதான சாலையில் ரூ.18 லட்சம் மதிப்பில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி,

1வது வார்டு, சக்ரேஸ்வரர் நகரில், 1 வது மற்றும் 2 வது தெருவில் ரூ.35.00 லட்சம் மதிப்பில் இரண்டு மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணி,

ராஜரத்தினம் நகர் நாலாவது குறுக்கு தெருவில் சலவை தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40 லட்சம் மதிப்பில் புதிய பல்நோக்கு கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.3 கோடியே 57 லட்சம் மதிப்பில் திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர், ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்ச்சியில் நகரமன்றத் தலைவர் என்.இ.கே. மூர்த்தி, மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே.பவுல், நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் பானு அரசு, நடராஜ், செல்வதுரை, பெனியமின், ஏ.சி.தெய்வசிகாமணி, எஸ்.சங்கர், ஐ.ஜேக்கப், குமாரசாமி சாது, விக்னேஸ்வரன், உமாபதி, ஜெகன், குமார், சாந்திராஜா, பரிசமுத்து, பொன்.மனோகரன், ஆசை தம்பி, டி.பிரியா குமார், பாபு, பேபிஸ்ரீ, என். ராஜ் அப்பு (எ)ஜெபராஜன், ஆ.நாராயணன், மு.சுரேஷ், திவாகர், நரேஷ், சுதாகர், தா.குடியரசன், ராஜேஷ் பிரவீன், மாவட்ட சலவை தொழிலாளர் அணி செயலாளர் முனுசாமி உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு ஏற்பாட்டில் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# வாலாஜாபாத் வடக்கு ஒன்றியத்தில் பொங்கல் விழா: 1500 கழகத்தினருக்கு நல உதவிகள்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. – க.செல்வம் எம்.பி. – சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

கஞ்சிபுரம், ஜன. 6 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பரந்தூரில் உள்ள வீனஸ் ரிசார்ட்ஸில் ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் இட்டு பொங்கல் விழாவை கொண்டாடினர். அதைத் தொடர்ந்து 1500 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு வேஷ்டி சட்டை, சேலை உள்ளிட்ட பொங்கல் பரிசாக வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த கழக நிர்வாகிகளுக்கு அறுசுவை பொங்கல் விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வாலாஜாபாத் பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட குழு உறுப்பினர் மா.தொ.அ.து. அமைப்பாளர் ராஜலட்சுமி குஜராஜ், முன்னாள் ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.பி.பூபாலன், ஒன்றிய அவைத் தலைவர் வி. பழனி , ஒன்றிய துணைச் செயலாளர்கள் வி. வெங்கட்ராமன், கவிதா டில்லிபாபு, மாவட்ட பிரதிநிதிகள் கே. ஆறுமுகம் , கே.பார்த்திபன், எம்.திருஞானசம்பந்தம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம். அருள்முருகன், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என்.ஜெயபால், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஆர். கே.சசிகுமார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஈ.அப்பன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள், கழக உடன்பிறப்புகள் பெருமளவில் கலந்து கொண்டனர்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு –

# சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பொதுக்கூட்டம் - 1047 பேருக்கு நல உதவிகள்!

## மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் வேண்டுகோள்!

சென்னை, ஜன.06

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (06.01. 2025 -திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் இளங்கோ சாலை, தேனாம்பேட்டையில் மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் நடைபெறுகிறது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சி உரையாற்றுகிறார்.

இதில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், எம்.எல்.ஏ., மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளர் தலைமைக்கழக பேச்சாளர் எஸ்.பத்மபிரியா ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஜே.நற்குணநாதன், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, வட்டச் செயலாளர்கள் எஸ்.என்.கே.ராமன், கோ. யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பி.ஜே.ஓம்குமார், எம்.எம்.டி.ஏ. கார்த்திக் வரவேற்புரையாற்றுகின்றனர்.

முனைவர் கே. ஜெகதீசன், பிரசன்ன ராஜகுமாரி நன்றியுரையாற்றுகிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை புகாரி
### சனவரி 6 (1999)



கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கலைஞர்நகர் வடக்கு பகுதி துணைச் செயலாளர்

# விருகை சா.நாகராசன் தாயார் சா.சரோஜா அம்மாள் மறைவு!

## கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி!



சென்னை, ஜன. 6

சென்னை தெற்கு மாவட்டம், மறைந்த கழக மூத்த முன்னோடி வி.கே.சாமுவேலின் மனைவியும், சா.புருஷோத்தமன், கலைஞர் நகர் வடக்குப் பகுதி துணைச் செயலாளர் விருகை சா.நாகராசன் ஆகியோரின் தாயாருமான சா.சரோஜா அம்மாள் (வயது 86) அவர்கள் நேற்று (5.1.2025 ஞாயிற்றுக்கிழமை) பகல் 1.30 மணியளவில், இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் 128-வது கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (6.1.2025 திங்கட்கிழமை) மதியம் 3 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு விருகம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூவாளூர் சின்னதுரை
### சனவரி 6 (2014)



தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவரும், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.

திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.

1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**